**DEPOSITION OF WITNESS**

**( Rule-42 C.R.P)**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, LALGUDI.**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | **Case No.CC 51 of 2019** |
| **Preliminary Register** | : | |
| **Sessions** | : | |

**Deposition of Witness for** **Prosecution : PW1**
**Defence :**
**Court :**

**Name**/பெயர் : மெர்ஸிலினா மெரினஸ் மோனிக்கா

**Father's/ Husband Name :**
தகப்பனார்/கணவர்பெயர்

**Village**/ கிராமம் :

**Taluk**/ வட்டம் :

**Caste** / இனம் :

**Calling**/ வேலை :

**Religion**/ மதம் :

**Age**/ வயது :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.09.2022.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது முதன்மை மாவட்ட நீதிமன்றம் திருச்சியில் ஆவண காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது இலால்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் துணை நாசர் கூடுதல் தலைமை எழுத்தராக பணிபுரிந்து வந்தேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 15.04.2019 ம் தேதி காலை 10 மணியளவில் ராஜீவ்காந்தி த/பெ.சப்பாணி,

செம்பியங்குடி, குலமாணிக்கம் அஞ்சல், அரியலூர் என்பவர் தமிழ்நாடு தேர்வாணையத்தின் வேலை குறித்து இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டதாக முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம் வழங்கிய வேலைக்கான ஆணையினை அப்போதைய இலால்குடி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தலைமை எழுத்தர் பாலமுருகன் என்பவரிடம் ஆஜர் எதிரி கொடுத்து பணியில் சேர்ந்தார். 15.04.2019 ம் தேதி காலை 10 மணி முதல் அரசாங்க ஊதியத்தை அவர் பெற்று வந்தார். அதன் பிறகு மே மாதம் 30 ம் தேதிக்குள் ராஜீவ்காந்தி த/பெ.சேகர், குலமாணிக்கம், அரியலூர் என்பவர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம், திருச்சியில் ஆஜராகி தான்தான் TNPSC தேர்வில் தேர்வு செய்யப்பட்டதாக மாவட்ட நீதிபதி அவர்களிடம் கூறியுள்ளார். அதன் பேரில் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி அவர்கள் ராஜீவ்காந்தி த/பெ.சேகர் என்பவரை விசாரணை செய்ததில் ராஜீவ்காந்தி த/பெ.சப்பாணி என்பவர் ஆள்மாறாட்டம் செய்து வேலைக்கு சேர்ந்துள்ளதாக தெரிய வந்ததாக மாவட்ட முதன்மை நீதிமன்றத்திலிருந்து இலால்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற தலைமை எழுத்தர் பாலமுருகன் அவர்களுக்கு தெரியபடுத்தி அவர் மூலம் நான் தெரிந்து கொண்டேன். ஆஜர் எதிரியானவர் அரசாங்கத்தை ஏமாத்தி ஆள்மாறாட்டம் செய்து ஆதாயம் பெறும் நோக்கத்துடன் வேலைக்கு சேர்ந்துள்ள விவரம் தெரிய வந்தது. இது சம்பந்தமாக 31.05.2019 ம் தேதி மதியம் 1.15 மணியளவில் எதிரி மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகாரானது **அ.சா.ஆ.1** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) –</u>

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**DEPOSITION OF WITNESS**

**( Rule-42 C.R.P)**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, LALGUDI.**

| | | |
|---|---|---|
| **Calendar** | **:** | |
| **Miscellaneous** | **:** | **Case No.CC 51 of 2019** |
| **Preliminary Register** | **:** | |
| **Sessions** | **:** | |

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **Prosecution :** | **PW2** |
| | **Defence :** | |
| | **Court :** | |

**Name**/பெயர் : ராஜீவ்காந்தி

**Father's/ Husband Name :** சேகர்
தகப்பனார்/கணவர்பெயர்

**Village**/ கிராமம் :

**Taluk**/ வட்டம் :

**Caste** / இனம் :

**Calling**/ வேலை :

**Religion**/ மதம் :

**Age**/ வயது :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.09.2022.**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரியலூர் மாவட்டத்தில் உள்ள குலமாணிக்கத்தில் குடியிருந்து இலால்குடி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.02.2018 ம் தேதி TNPSC Group – 4 தேர்வு எழுதினேன். அதன் பிறகு 26.03.2019 ம் தேதி TNPSC லிருந்து வரச்சொன்னதின் பேரில் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு எனக்கு

ஆர்டர் காப்பியானது வரும் என்று சொன்னார்கள். 2 மாதங்கள் கழித்து 30.05.2019 ம் தேதி நான் திருச்சி, முதன்மை மாவட்ட நீதிமன்றத்திற்கு சென்று என்னுடைய ஆர்டர் காப்பியானது வரவில்லை என்று A1 பிரிவில் கேட்டேன். 10.04.2019 ம் தேதியில் ஏற்கனவே இலால்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமன செய்து பணிக்கான ஆணையை அனுப்பி விட்டதாக கூறினார்கள். நான் என்னுடைய நியமன உத்தரவை அவரிடம் காண்பித்து நான் இன்னும் பணியில் சேரவில்லை என்று கூறினேன். அதன் பிறகு இலால்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு போன் செய்து ராஜீவ்காந்தி த/பெ.சேகர் என்பவர் வந்திருப்பதாக கூறிய போது 15.04.2019 ம் தேதியிலேயே ராஜீவ்காந்தி த/பெ.சப்பாணி, செம்பியங்குடி கிராமத்தைச் சேர்ந்தவர் இலால்குடி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்துவிட்டதாக கூறினார்கள். அதன் பிறகு நீதிமன்றத்தில் ஆள்மாறாட்டம் செய்து எதிரியானவர் பணியில் சேர்ந்த விவரத்தை என்னிடம் கூறினார்கள். அன்றைய தினமே இரவு 9.30 மணியளவில் எனக்கு பணி ஆணையினை கொடுத்தார்கள். அதன் பிறகு 31.05.2019 ம் தேதி எதிரி மீது நடவடிக்கை எடுக்குமாறு அ.சா.1 புகார் கொடுத்தார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) –</u>

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**DEPOSITION OF WITNESS**

**( Rule-42 C.R.P)**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, LALGUDI.**

**Calendar :**
**Miscellaneous : Case No.CC 51 of 2019**
**Preliminary Register :**
**Sessions :**

**Deposition of Witness for Prosecution : PW3**
**Defence :**
**Court :**

**Name**/பெயர் **:** டேனியல் சுந்தர்ராஜ்

**Father's/ Husband Name :** சவரிமுத்து
தகப்பனார்/கணவர்பெயர்

**Village**/ கிராமம் :

**Taluk**/ வட்டம் :

**Caste** / இனம் :

**Calling**/ வேலை :

**Religion**/ மதம் :

**Age**/ வயது :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.09.2022.**

<u>முதல் விசாரணை</u>

நான் குலமாணிக்கத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது செம்பியங்குடி அஞ்சல் நிலையத்தில் போஸ்ட்மேனாக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது குலமாணிக்கத்தில் போஸ்ட்மேனாக 19 வருடமாக வேலை செய்து வந்தேன். அ.சா.2 யை எனக்கு தெரியும். எதிரியானவர் 12 ஆம்

வகுப்பு படித்து, ஆசிரியர் பயிற்சி மற்றும் பிஎஸ்சி படித்து விட்டு வெல்டிங் பட்டறையில் வேலை செய்து வந்தார். கடந்த 12.04.2019 ம் தேதி ராஜீவ்காந்தி பெயரில் நீதிமன்றத்தில் உதவியாளராக பணியில் சேர ஆர்டர் வந்தது. எதிரியானவர் தேர்வு எழுதியுள்ளதாக கூறியதின் பேரில் ராஜீவ்காந்தி த/பெ.சப்பாணி என்பவரிடம் விலாசத்தை பார்க்காமல் அவர் பெயரை மட்டும் பார்த்து விட்டு அவரிடம் கொடுத்துவிட்டேன். அதன் பிறகு 31.05.2019 ம் தேதி தான் எதிரியானவர் ஆள்மாறாட்டம் செய்து நீதிமன்றத்தில் உதவியாளராக பணியில் சேர்ந்த விவரம் போலிசார் சொல்லி தெரிந்து கொண்டேன். பிறகு போலிசாரிடம் நான் தவறுதலாக எதிரிக்கு தபாலை சார்வு செய்தது பற்றி கூறினேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) –</u>

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.